# மக்கள் நீதி மய்யம்

PR/09072021/03/T

09.07.2021
சென்னை

**<u>சென்னை ஐஐடி கல்லூரியில் நடக்கும் சாதிய பாகுபாடுகள் மற்றும் அநீதிகளை பற்றிய அறிக்கை</u>**

அக்னி நெருப்பினூடே

அமிழ்தமிழ்ந்து எழுந்தாலும்

சாம்பலாகி போகாதே

சர்வகால நிவாரணி- பாரதி.

அவன் விதைத்த விதை நாங்கள், மாணவர்கள்.

அநீதி கண்டு திமிறித் துடிக்கும் ஒவ்வொரு இளைஞனுக்குக்குள்ளும் துடித்தெழுந்திருக்கும் அவனது வார்த்தைகள். இளைய தலைமுறையினரின் இமைகளை என்றுமே இருள் கொண்டு மூட இயலாது. அவை வெளிச்சம் கண்ட நொடிகள் கண்ணெதிரே புரிந்திருக்கும் ஜல்லிக்கட்டு போராட்டத்தில். மாணவர்களின் பலத்தையும், அநீதிகளுக்கு எதிராக போராடும் அவர்களின் போராட்ட குணத்தையும் தமிழகச் சரித்திரமே செப்பும்.

தொடர் மாணவர்களின் மரணங்களும், பேராசிரியர் ராஜினாமா நிகழ்வும் சென்னை ஐஐடி கல்லூரியில் நடக்கும் சாதிய பாகுபாடுகளையும், அநீதிகளையும் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. சாதி வன்முறைகளில் சிக்குண்ட மாணவரின் குரல்களாக நாங்கள் இருக்கிறோம், என்றும் இருப்போம். 'மேம்படுத்தப்பட்ட சமூக நீதியை' கொள்கையாக கொண்டிருக்கும் மக்கள் நீதி மய்யம் இதுபோன்ற அநீதிகளை ஒரு போதும் பொறுத்துக் கொள்ளாது.

சென்னை ஐஐடி கல்லூரியில், நாளைய தலைவர்களான மாணவர்களின் மீது நடத்தப்படும் சாதிய பாகுபாடுகளையும், அநீதிகளையும் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்த மக்கள் நீதி மய்யத்தின் மாணவர் அணி அனுமதி வேண்டி இருந்தது. கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகளையும், சட்ட ஒழுங்கையும் காரணம் காட்டி ஐஐடி கல்லூரி வளாகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது.

புதிய எண் 4, பழைய எண் 172, எல்டாம்ஸ் சாலை, ஆழ்வார் பேட்டை, சென்னை - 600018.
044 2435 8718
/maiamofficial
www.maiam.com

சாதிகள் இல்லையென கற்பிக்க வேண்டிய கல்வி நிலையங்களே இப்படி சாதிய வன்முறைக்கு வித்தாக அமையலாமா?

இதற்கு தீர்வாக அரசே முன்வந்து "விசாரணைக் குழு" அமைத்து நடவடிக்கை எடுக்காவிடில் எங்கள் போராட்டம் தொடங்கும். சாம்பலாகிப்போகும் பீனிக்ஸ் பறவைகளும் மாணவர்களை நெருங்க அஞ்சி நிற்கும். சாதிய வன்கொடுமைகளுக்கு எதிரான போராட்டத்தில், அக்னிக் கணைகளை அஞ்சாமல் தொடுத்து நிற்கும் எங்கள் விழிபார்வை.

நினைவில் கொள்ளுங்கள்! எம் தலைவர், நம்மவர் டாக்டர். கமல் ஹாசன் அவர்கள் சொன்னது போல், மாணவர்களின் எதிர்காலம் விற்பனைக்கு அல்ல!

**ராகேஷ் ரா. ஷம்ஷேர்,**
**மாநிலச் செயலாளர் - மாணவரணி,**
**மக்கள் நீதி மய்யம்.**